உ
ஓம் ப்ரஹ்மணே நம:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகள்
அருளிச்செய்த

ஸ்ரீ தத்துவபோதம்

(வினா விடை)

இ:து
தஞ்சைமாநகரம்
வெ. குப்புஸ்வாமிராஜூ அவர்களால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை

[4-வது பதிப்பு]
1921

உ

ஓம் ஸ்ரீகணேசாய நம:

ஸ்ரீ தத்துவபோதம்

மங்கலம்

எங்குமாய் நின்றி லங்கு மிணையிலா வீசன் றானுஞ்
சங்கர பகவற் பாதத் தனிப்பெயர் பூண்டு வந்து
நங்குறை தீரு மாறு நவின்றனன் பாடி யாதி
யிங்கவன் றன்னை யேத்தி யியற்றுவன் றத்வ போதம்.

நூல்

சாதன சதுட்டயசம்பன்னர்களாகிய அதிகாரிகளுக்கு மோக்ஷசாதனமாகிய தத்துவவிவேகப்பிரகாரத்தைச் சொல்லுவாம்.

வினா: - சாதன சதுட்டய மென்பது யாது?

விடை: - (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம் (நித்திய அநித்தியப் பொருள்களைப் பகுத்தறிதல்), (2) இகாமுத்திரார்த்த பலபோக விராகம் (இம்மை மறுமைப் பயன்களாகிய போகங்களில் இராகமின்மை) (3) சமாதி சட்சமபத்தி (சம்முதலிய ஆறனடைவு), (4) முமுக்ஷுத்துவம் (மோக்ஷத்தை விரும்புதல்) என்பனவாம்.

வினா: - நித்தியாநித்திய வஸ்து விவேகமென்பது யாது?

விடை: - ஒன்றாகிய பிரமம் நித்தியப்பொருள்; அதற்கு அநித்தியமான யாவும் அநித்தியப்பொருளாமென்னும் இதுவே நித்தியாநித்திய வஸ்து விவேகமாம்.

வினா: - விராகமென்பது யாது?

விடை: - இகலோக பரலோக போகங்களில் இச்சையில்லாமையாம்.

வினா: - சமாதிசாதன சம்பத்தி யென்பது யாது?

விடை: - சமம், தமம், உபாதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் என்பவனவாம்.

வினா: - சமம் என்பது யாது?

விடை: - சமமென்பது மனதை யடக்குதலாம்.

வினா: - தமம் என்பது யாது?

விடை: - கண் முதலிய புறவிந்திரியங்களை யடக்குதல் தமமாம்.

வினா: - உபாதி என்பது யாது?

விடை: - உபாதியென்பது சுவதர்ம அநுஷ்டானமேயாம், அதாவது பாகியதர்மங்களினின்றும் நிவர்த்திபாதலேயாம்.

வினா: - திதிக்ஷையென்பது யாது?

விடை: - சீதம், உஷ்ணம், சுகம், துக்கம் முதலியவற்றைச் சகித்தல் திதிக்ஷயாம்.

வினா: - சிரத்தை யென்பது யாது?

விடை: - குருவாக்கியம் வேதாந்தவாக்கியம் முதலியவற்றில் உண்டாகும் விசுவாசம் சிரத்தையாம்.

வினா: - சமாதான மென்பது யாது?

விடை: - சித்த ஏகாக்கிரத்தன்மை (மனவொருமை) சமாதானமாம்.

வினா: - முமுக்ஷுத்துவம் என்பது யாது?

விடை: - மோக்ஷம் எனக்கு உண்டாக வேண்டுமென்னும் இச்சை முமுக்ஷுத்துவமாம்.

இது சாதனசதுட்டயம். இதனை யுடைபவர் தத்துவ விவேகத்திற்கு அதிகாரக ளாகின்றனர்.

வினா: - தத்துவவிவேகமென்பது யாது?

விடை: - ஆத்மா சத்தியம், அதற்கு நியமான யாவும் மித்தையென்னும் நிச்சயம் தத்துவ விவேகமாம்.

வினா: - ஆத்மா வென்பது யாது?

விடை: - ஸ்தூல சூக்ஷும காரண சரீரங்களுக்கு வேறாய், பஞ்சகோசங்களுக்கு அப்பாற்பட்டதாய், மூன்றவஸ்தைகளுக்குஞ் சாட்சியாய், சச்சிதாநந்த சொரூபமாய் இருப்பதெதுவோ, அது ஆத்மாவாம்.

வினா: - ஸ்தூலசரீரமென்பது யாது?

விடை: - பஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களாலாகியதும், கருமத்தாற் றோன்றியதும், சுகதுக்காதி போகத்திற் கிடனாயதுமாகிய பிறத்தல், இருத்தல், வளர்தல், திரிதல், குறைதல், கெடுதல் என்னும் ஆறு விகாரங்களையுமுடைய இச்சரீரம் ஸ்தூல சரீரமாம்.

வினா: - சூக்ஷுமசரீரமென்பது யாது?

விடை: - அபஞ்சீகிருத பஞ்சமகா பூதங்களா லாகியதும், கருமத்தாற் றொன்றியதும், சுகவுக்காதி போகத்திறகுச் சாதனமாகியதுமாய், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, பிராணாதி ஐந்து, மனம் ஒன்று, புத்தி ஒன்று ஆகிய இப்பதினேழு கலைகளோடு கூடியிருப்பதெதுவோ, அது சூக்ஷுமசரீரமாம்.

வினா: - ஞானேந்திரியங்கள் எவை?

விடை: - சுரோத்திரம் (காது), துவக்கு (தோல்), சக்ஷு (கண்),* [*இதனையே சிங்நுவை யென்றுங் கூறுவர்] இரசனை (நா), கிராணம் (மூக்கு) என்று மைந்தும் ஞானேந்திரியங்களாம்.

வினா: - ஞானேந்திரியங்களின் அதிதேவைகள் எவை?

விடை: - சுரோத்திரியத்திற்குத் திக்கும், துவக்கிற்கு வாயுவும், சக்ஷுவிற்குச் சூரியனும், இரசனைக்கு வருணனும், கிராணத்திற்கு அசுவனிகுமாரரிருவரும் தேவதைகளாம்.

வினா: - ஞானேந்திரியங்களின் விஷயங்கள் எவை?

விடை: - சுரோத்திரத்திற்குச் சத்தத்தைக் கவர்த்தலும், துவக்கிற்குப் பரிசத்தைக் கவர்தலும், சக்ஷுவிற்கு உருவத்தைக் கவர்தலும், இரசனைக்கு இரசத்தைக் கவர்தலும், கிராணத்திற்குக் கந்தத்தைக் கவர்தலும் விடயங்களாம்.

வினா: - கன்மேந்திரியங்கள் எவை?

விடை: - வாக்கு, பாணி, பாதம், பாயு, உமஸ்தமென்னுமைந்துங் கன்மோதிரியங்களாம்.

வினா: - கன்மேந்திரியங்களின் அதிதேவதைகளெவை?

விடை: - வாக்கிற்கு அக்கினியும், பாணிக்கு (கைகளுக்கு) இந்திரனும், பாதங்களுக்கு விஷ்ணுவும், பாயுவிற்கு இயமனும், உபஸ்தத்திற்குப் பிரஜாபதியு (பிரமனு)ம் தேவதைகளாம்.

வினா: - கன்மேந்திரியங்களின் விஷயங்கள் எவை?

விடை: - வாக்கிற்கு வசனமும், பாணிக்குப் பண்டங்களையேற்றலும், பாதத்திற்கு நடத்தலும், பாயுவிற்கு மல நீக்கமும், உபஸ்தத்திற்கு ஆநந்தமும் விடயங்களாம்.

வினா: - காரண சரீரமென்பது யாது?

விடை: - *அநிர்வாச்சியமாய்† அநாதியாய் அவித்யா வடிவமாய்ச் சரீர மிரண்டற்குங் காரணமாத்திரமா யிருக்குஞ் அவசொரூப அஞ்ஞானமாகிய நிருவிகற்பவடிவம் எதுவோ, அது காரணசரீரமாம்.

[* மெய்யென்றும் பொய்யென்றுஞ் சொல்லத்தகாதது எதுவோ அது அநிர்வாச்சியமாம். மாயையைப் பொய்யென்போமாயின் பிரபஞ்சாற்பத்தி கூடாது; மாயையோ பிரபஞ்சத்தை உண்டு பண்ணுகின்றது; சத்திய மென்போமாயின் ஞானத்தாற் கெடுகின்றது; ஆலின் மாயை அநிர்வாச்சியமாம். அங்ஙனமே, பழுதையிற்றோன்றிய பாம்பு பொய்யென்போமாயின் உண்டாகின்ற அச்சம், நடுக்கமுதலியன உண்டாகலாகா. சத்தியமெனின் விசாரத்தாற் கெடுகின்றது. ஆதலாற் பழுதையிற் பாம்பு அநிர்வாச்சியமாம். அநிர்வாச்சியம்=இஃது இன்னதென் றுறுதியாய்ச் சொல்லத்தகாதது. அநிர்வசநீயம் என்பத்ம் அதுவே.

† உற்பதி யில்லாததாய்.]

வினா: - மூன்றவஸ்தைகள் எவை?

விடை: - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியென்பவை மூன்றவஸ்தைகளாம்.

வினா: - சாக்கிராவஸ்தை யென்பது யாது?

விடை: - சுரோத்திர முதலிய ஞானேந்திரியங்களால் சப்தமுதலிய விஷயங்கள் எக்காலத்தி லறிப்படுகின்றனவோ, அது சாக்கிராவஸ்தையாம். (அவஸ்தை - காலம் - சமயம்).

வினா: - இவ்வஸ்தையின் அபிமானி யாவன்?

விடை: - இவ்வவஸ்தையின் தூல சரீராபிமானியாகிய ஆத்மா விசுவனெனப்படுவன்.

வினா: - சொப்பனாவஸ்தை யென்பது யாது?

விடை: - சாக்கிரவஸ்தையில் பார்க்கப்பட்டவைகளாலும், கேட்கப்பட்ட வைகளாலும் உண்டாகிய வாசனையால் நித்திரைக்காலத்தில் எதில் பிரபஞ்சந் தோற்றுகின்றதோ, அது சொப்பனவஸ்தையாம்.

வினா: - இவ்வவஸ்தையின் அபிமானி யாவன்?

விடை: - இவ்வவஸ்தையின் சூக்ஷும சரீரபிமானியாகிய ஆத்மா தைஜஸன் எனப்படுவன்.

வினா: - சுழுத்தியவஸ்தை யென்பது யாது?

விடை: - யான் ஒன்றுமறியேன், நித்திரையென்னாற் சுகமா யநுபவிக்கப்படுகிறது என்னும் நினைவிற்கு ஏதுவாய் அநுபவகாலம் சுழுத்தியவஸ்தையாம்.

வினா: - இவ்வவஸ்தையின் அபிமானி யாவன்?

விடை: - இவ் வவஸ்தையின் காரண சரீராபிமானியாகிய ஆத்மா பிராஞ்ஞன் எனப்படுவன்.

வினா: - பஞ்சகோசங்கள் எவை?

விடை: - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்பனவாம்.

வினா: - அன்னமயகோடம் என்பது யாது?

விடை: - அன்ன ரசத்திலேயுண்டாய், அன்னரசத்தினாலே விருத்தியடைந்து, அன்னரூபப் பிருதிவியில் எது ஒடுங்குகின்றதோ, அது அன்னமயகோசமாம். அதுவே தூலசரீரமாம்.

வினா: - பிராணமயகோசம் என்பது யாது?

விடை: - *பிராணாதியைந்து வாயுக்களும் வாக்காதி ஐந்து கன்மேந்திரியங்களும் பிராணமயகோசமாம்.

[* பிராணாதி யைந்து வாயுக்களாவன: - பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்பனவாம். அவற்றுள், பிராணன்: இதயத்திலிருந்து உசுவாச நிசுவாசங்களைச் செய்யும்; அபானன்: குதத்திலிருந்து கொண்டு மலசங்களை வெளிப்படுத்தும்; சமானன்: உந்தியிலிருந்துகொண்டு உண்ட அன்னரசங்களை நாடியின் வழியாய்ச் சரீரமுழுவதினும் செலுத்தும்; உதானன்: உண்பவனவும் பருகுவனவுமாகிய அன்னரசங்களைப் பிரிக்கும்; வியானன்: உடல் முழுவதினுமிருந்து உடலின் மூட்டுகளைத் திருப்பும்.]

வினா: - மனோமயகோசம் என்பது யாது?

விடை: - மனதும், ஞானேந்திரியமைந்துஞ் சேர்ந்து ஆவது எதுவோ, அது மனோமயகோசமாம்.

வினா: - விஞ்ஞானமயகோசம் என்பது யாது?

விடை: - புத்தியும் ஞானேந்திரிய மைந்துஞ் சேர்ந்து ஆவது எதுவோ, அது விஞ்ஞானமயகோசமாம்.

வினா: - ஆனந்தமயகோசம் என்பது யாது?

விடை: - காரண சரீரவடிவினதாகிய அவித்தையின்கணுள்ள *மலினசத்துவமான† பிரியாதி விருத்திகளோடு கூடியது ஆனந்தமயகோசமாம்.

[* இரஜோ தமோ குணங்களால் அமிழ்த்தப்பட்ட சத்துவ குணம் மலின சத்துவகுணமாம்.

† பிரியாதி விருத்திகளாவன: - விரும்பியபொருளைக் கண்ட காலத்துண்டாகும் சுகவிருத்தி பிரியவிருத்தியாம்; விரும்பிய பொருள் கிடைத்தகாலத்துண்டாகும் சுகவிருத்தி மோதவிருத்தியாம்; விரும்பியபொருளைப் போகிக்குங்காலத்துண்டாகும் சுகவிருத்தி பிரமோத விருத்தியாம்.]

இப் பஞ்சகோசங்கள் என் சரீரம், என் பிராணன், என் மனம், என் புத்தி, என் ஞானம் என்று தன்னாலேயே உணரப்படுகின்றன. எப்படி எனதென்னுந் தன்மையால் அறியப்பட்ட கனகம், குண்டலம், வீடு முதலியன தன்னினும் வேறாகின்றனவோ, அதுபோலப் பஞ்சகோச முதலியனவும் எனதென்னுந் தன்மையால் அறியப்படுகின்றனவாதலால் ஆன்மாவாகா.

வினா; - அங்ஙனமாயின் ஆன்மாவின் சொரூபம் யாது?

விடை: - சத்து, சித்து, ஆனந்தம் ஆத்மாவின் சொரூபமாம்.

வினா: - சத்தென்பது யாது?

விடை: - மூன்று காலங்களினு மிருப்பது சத்தாம்.

வினா: - சித்தென்பது யாது?

விடை: - ஞானசொரூபம் சித்தாம்.

வினா: - ஆனந்தமென்பது யாது?

விடை: - சுகசொரூபம் ஆனந்தமாம்.

இவ்வாறு சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மாவை (தன்னை) அறியவேண்டும்.

வினா: - இருபத்துநான்கு தத்துவோற்பத்தியின் கிரமம் யாது?

விடை: - பிரமத்தை ஆசிரியித்ததும், சத்துவ ரஜோ தமோகுண வடிவினதுமாகிய மாயையுளது. அதினின்றும் ஆகாயமும், ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும், அப்புவினின்று

பிருதிவியும் உண்டாயின. இவ்வைந்து தத்துவங்களுள் ஆகாயத்தின் சாத்துவிகாமிசத்தினின்று சுரோத்திரேந்திரியமும், வாயுவின் சாத்துவிகாமிசத்தினின்று துவக்கிந்திரியமும், அக்கினியின் சாத்துவிகாமிசத்தினின்று சக்ஷுவிந்திரியமும், ஜலத்தின் சாத்துவிகாமிசத்தினின்று இரசனையிந்திரியமும் பிருதிவியின் சாத்துவிகாமிசத்தினின்று கிராணேந்திரியமும் உண்டாயின. இவ்வைந்து தத்துவங்களின் * சமஷ்டி[* சமஷ்டி - சேர்க்கை] சாத்துவிகாமிசத்தினின்று மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரணங்க்ள் உண்டாயின. சங்கற்ப விகற்பவடிவினது மனம்; நிச்சயவடிவினது புத்தி; யான் என்பதைச் செய்வது அகங்காரம்; சிந்தனையைச் செய்வது சித்தம். இவற்றுள் மனதிற்குச் சந்திரனும், புத்திக்குப் பிரமனும், அகங்காரத்திற்கு உருத்திரனும், சித்தத்திற்கு வாசுதேவனும் தேவதைகளாம்.

இவ்வைந்து தத்துவங்களுள் ஆகாயத்தின் இராசதாமி சத்தினின்று வாக்கிந்திரியமும், வாயுவின் இராசதாமிசத்தினின்று பாணிந்திரியமும், அக்கினியின் இராசதாமிசத்தினின்று பாதேந்திரியமும், ஜலத்தின் இராசதாமிசத்தினின்று உபஸ்தேந்திரியமும், பிருதிவியின் இராசதாமிசத்தினின்று குதேந்திரியமும் உண்டாயின. இவற்றின் சமஷ்டி இராசதாமிசத்தினின்று பஞ்சப்பிராணனுண்டாயின. இவ்வைந்து தத்துவங்களின் தாமதாமிசத்தினின்று பஞ்சீகிருத பஞ்சதத்துவங்கள் உண்டாயின. இஃது இருபத்து நான்கு தத்துவோற்பத்திக் கிரமமாம்.

வினா: - * பஞ்சீகரணம் எங்ஙனம்? [*பஞ்சீகரணம் - அவ்வைநதாக்கல்.]

விடை: - இப்பஞ்ச மகாபூதங்களின் தாமசாம்ச்சொரூபமாகிய ஒவ்வொரு பூதத்தையும் இவ்விரண்டாகப் பிரித்து, அவற்றின் ஒவ்வொரு பாதியை வேறே சும்மாவிருத்தி, மற்ற ஒவ்வொரு பாதியையும் நான்காகப் பிரித்து, தமது பாதிகளின் வேறாகிய பாதிகளில் தம் பாகங்கள் நான்கையும் சேர்க்க, அப்பொழுது† பஞ்சீகரணம் ஆகின்றது. [† இப்பஞ்சீகரணத்தை ஸ்ரீ விசாரசந்திரோதயம் என்னும் நூலில் விரிவாய்க் காணலாம்.] இப்பஞ்சீகிருக பஞ்சமகா பூதங்களினின்றும் ஸ்தூலசரீரம் உண்டாகிறது. இவ்வாறறாற் பிண்ட பிரமாண்டங்களுக்கு அயிக்கிய முண்டாயிற்று.

வினா: - ஜீவனென்பது யாது? ஈசுவரன் யாவன்?

விடை: - ஸ்தூல சரீராபிமானியாய் ஜீவனென்னும் பெயருடையதாய்ப் பிரமத்தின் பிரதிபிம்ப முண்டாகின்றது. அச்சீவனே பிரகிருதியினால் ஈசுவரனைத் தன்னின் வேறாக அறிகின்றது. அவித்தையாகிய உபாதியுடையதாய் ஆத்மா ஜீவனெனப்படுகின்றது. மாயொபாதி யுடையதாய் ஈசுவரன் எனப்படுகின்றது. இவ்வாறு உபாதி பேதத்தால் ஜீவேசுவர பேததிருஷ்டி எதுவரையிலு

மிருக்கின்றதோ, அதுவரையிலும் ஜனன மரண முதலிய வடிவினதாகிய சம்சாரம் நீங்குகிறதில்லை. அக் காரணத்தால் ஜீவேசுவரர்களின் பேதபுத்தி (ஜீவன் வேறு, ஈசுவரன் வேறு என்னும் ஞானம்) அங்கீகரிக்கத் தக்கதன்று.

வினா: - அப்படியானால் அகங்காரத்தோடு கூடிய கிஞ்சிஞ்ஞனாகிய ஜீவனுக்கும், அகங்கார மில்லாதவனும் சருவஞ்ஞனுமாகிய ஈசுவரனுக்கும் தத்துவமசியென்னும் மகாவாக்கியத்தால் எப்படி அபேதஞானம் உண்டாகும்? இருவரிடத்தும் விரோத தருமம் காணப்படுதலால்.

வினா: - அங்ஙனம் அன்று; ஸ்தூல சூக்ஷும சரீரபிமானி துவம்பத வாச்சியார்த்தமாம்; உபாதியினின்று விடுபட்டதும் சமாதிதசை யடைந்ததுமாகிய சுத்தசைதன்யம் துவம்பத லக்ஷியார்த்தமாம். இப்படியே சர்வஞ்ஞுத்துவ முதலியவற்றோடு கூடிய ஈசுவரன் தற்பத வாச்சியார்த்தமும், உபாதியின்றிய சுத்தசைதன்னியம் தற்பத லக்ஷியார்த்தமுமாம். ஆகவே ஜீவேசுவரர்களுக்குச் சைதன்னிய வடிவமாக அபேதங் கூறதலில் பாதகமின்று. இவ்வாற்றான் வேதாந்த வாக்கியங்களாலும் சற்குரு உபதேசத்தாலும் எல்லாப் பூதங்களிடத்தும் எவர்களுக்குப் பிரமபுத்தி (சுத்த சச்சிதானந்த பிரமம் நான் என்னும் நிச்சயம்) உண்டாகின்றதோ, அவர்களே ஜீவன்முக்தர்கள் எனப் பொருளாகின்றது.

வினா: - ஜீவன்முக்தன் என்பவன் யாவன்?

விடை: - தேகம் யான், புருஷன் யான், பிராமணன் யான், சூத்ரிஅன் யான் என்னும் திடநிச்சயத்தைப்போல, யான் பிராமணன் அல்லன், யான் சூத்திரனல்லன், யான் புருஷனல்லன், யான் அசங்க சச்சிதானந்த சொப்பிரகாச சருவாந்தரியாமியாகிய சிதாகாச்சொரூபன் என்னும் திட நிச்சய வடிவினதாகிய அபரோக்ஷ ஞானமுடையவன் ஜீவன்முக்தன் எனப்படுவன். பிரமமே யானென்னும் அபரோக்ஷ ஞானத்தால் சகல கருமபந்தங்களினின்றும் விடுபட்டவனாகின்றான்.

வினா: - கருமங்கள் எத்தனை வகையாம்?

விடை: - ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என்னும் பேதத்தால் மூவகையாம்.

வினா: - ஆகாமியம் என்பது யாது?

விடை: - வர்த்தமான தேகத்திற் செய்யப்படும் புண்ணிய பாவமாகிய கருமம் எதுவோ, அது ஆகாமியம் எனப்படும்.

வினா: - சஞ்சிதம் என்பது யாது?

விடை: - அனந்தகோடி ஜன்மங்களுக்குக் காரணவடிவமாய் முன்னரே சம்பாதிக்கப்பட்டுள்ள கருமக் கூட்டம் எதுவோ, அது சஞ்சிதம் என அறியத்தக்கது.

வினா: - பிரார்த்தகருமம் என்பது யாது?

விடை; - இச்சரீரத்தை யுண்டுபண்ணி இவ்வுகலத்தில் இவ்வாறு சுகதுக்காதிகளைத் தரும் கருமம் எதுவோ, அது பிரார்த்தமாம்.

வினா: - பிராரத்தகர்மம் எதனால் நசிக்கும்?

விடை: - 'பிராரத்த கருமநாசம் போகத்தினாலேயே யுண்டாம்' என்பதனான் பிரார்த்தகர்மம் போகத்தினால் நஷ்டமாம்.

வினா: - அப்படியானால் சஞ்சிதகருமம் எதனால் நசிக்கும்?

விடை; - சஞ்சிதகருமம் பிரமமே நான் என்னும் நிச்சயவடிவினதாகிய ஞானத்தாற் கெடும்.

வினா: - ஆகாமியகருமம் எதனாற் கெடும்?

விடை: - ஆகாமியகருமமும் ஞானத்தாற் கெடும். தாமரையிலையிற் றண்ணீர்போல் ஆகாமியகருமத்திற்கும், ஞானிக்கும் சம்பந்தமில்லை.

வினா: - அப்படியானால் அவர்களாற் செய்யப்படும் புண்ணிய பாவங்களுக்குக் கதி யாது?

விடை: - * ஞானியை எவர்கள் துதித்துப் பூசித்தருச்சிக்கின்றார்களோ, அவர்களை அவன் செய்த ஆகாமிய புண்ணியமும், எவர்கள் நிந்தித்துத் துவேஷித்துத் துக்கத்தைத் தருகின்றார்களோ, அவர்களை அவன் செய்த ஆகாமிய பாவமும் அடைகின்றன. [* இதஞ் செய்வோர் புண்ணியங்களையும், துவேஷிப்போர் பாபங்களையும் கொள்ளுகின்றார்கள்' என்பது சுருதி.]

இவ்வாறு ஆத்மாவையுணர்ந்தவன் "ஆத்மஞானியானவன் சோகத்தைக் கடக்கின்றான்" என்னுஞ் சுருதியினானும், "காசியிலேனும் சண்டாளனுடைய வீட்டிலேனும் சரீரத்தை விடுக; பற்றொழிந்த இவன் ஞானங் கிடைத்த காலத்தில் முக்தனாகின்றான்" என்னும் ஸ்மிருதியினாலும் சம்சாரத்தைக் கடந்து பிரமாநந்த்ததை இகத்திலேயே யடைகின்றான்.

ஸ்ரீ தத்துவபோதம்

முற்றிற்று.